
# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்

(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)

ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:8 Issue :31 July 2026*

கோட்டை:8 வாயில்:31 ஜூலை 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India

**Dr. Ravindran A/L Maraya**

Head of Department & Senior Lecturer, Department of Indian Studies (DIS), Universiti Malaya, Kuala Lumpur, Malaysia.

**Dr Silllalee A/L S.Kandasamy**

Senior Lecturer, Department of Indian Studies, Universiti Malaya,

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi.

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA.

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,
Eastern University Srilanka

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# தமிழ்



# ஆசீவகப் புனைவுகள் ஒரு பார்வை

## *A Perspective on Ajivika Narratives*

**முனைவர் சு.சிவகாமசுந்தரி,** உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை ஸ்ரீ சங்கரா கலை அறிவியல் கல்லூரி தன்னாட்சி ஏனாத்தூர் காஞ்சிபுரம் - *631561.*

***Dr.S.Sivagamasundari,*** *Assistant Professor In Tamil, Sri Sankara Arts Science College (Autonomous),Enathur Kanchipuram - 631561.*

***Abstract***

*The term Tattuvam (Philosophy) means "the essential nature of a thing." The demonstrative word 'Athu' ("that") denotes different meanings in different religious traditions. Therefore, philosophy is understood as a branch of knowledge that investigates the nature of reality and establishes truth by examining the intrinsic characteristics of existence. In Tamil literary tradition, terms such as Meypporul (Ultimate Reality) and Samaya Kanakku (Religious Doctrine) are also used as equivalents of philosophy. Ājīvika (Āsīvagam) represents the metaphysical doctrine and ascetic way of life of the ancient Tamils. Although no original texts on Ājīvika philosophy have survived, numerous references to its doctrines are found in the writings of Buddhist and Jain scholars, particularly in texts that oppose non-theistic beliefs, as well as in archaeological and other historical sources. According to the Ājīvikas, the universe is constituted by seven fundamental principles: earth, water, fire, air, pleasure, pain, and life (soul). They regarded these seven elements as the philosophical foundations that constitute the world. This study explains how Indian philosophical ideas are reflected in the philosophical traditions of Ājīvika, Jainism, and Buddhism, and examines their significance within the broader context of Indian philosophy.*

***Keywords:*** *Ajivika, philosophy, asceticism, principles, symbols*

***ஆய்வுச் சுருக்கம் (Abstract)***

*தத்துவம் என்ற சொல் ''அதன் தன்மை'' எனப் பொருள்படும். ''அது'' என்ற சுட்டுச் சொல் சமயந்தோறும் வேறு வேறு பொருளைக் குறிக்கும். ஆதலின் பொருள் தன்மைகளை ஆராய்ந்து மெய்ம்மையினை நிலைநாட்டும் அறிவுக் களஞ்சியமாக அறிவுக் கலைக்குத் தத்துவம் என்ற குறியீடு வழங்கியது. இச்சொல்லுக்கு இணையாக மெய்ப்பொருள் , சமயக் கணக்கு என்ற குறியீடுகள் தமிழிலக்கியத்தில் காணப்படுகின்றது. ஆசீவகம் என்பது தமிழரின் மெய்யியல் கொள்கையும், துறவு வாழ்க்கையும் ஆகும். ஆசீவக மெய்யியல் பற்றிய நூல்கள் கிடைக்கவில்லை. ஆயினும் பௌத்தம், ஜைனம் போன்ற சமய அறிஞர்கள் எழுதிய இறைமறுப்பு நூல்களில் இருந்தும், பிற தொல்பொருளியல் நூல்களிலிருந்தும் ஆசீவகத் தத்துவங்கள் பற்றிய எண்ணற்ற குறிப்புகள் உள்ளன. ஆசீவகர் நிலம்,நீர்,தீ,வளி,இன்பம்,துன்பம், உயிர் என்னும் ஏழும் தான் உலகாகக் காட்சி தரும் தத்துவங்கள் என்றனர்.ஆசீவகம்,சமணம், பௌத்தம் ஆகிய தத்துவங்களிலும் கூட இந்தியத் தத்துவங்கள் இடம்பெற்றிருப்பதை இவ்வாய்வு விளக்குகின்றது.*

***திறவுச்சொற்கள்:*** *ஆசீவகம், மெய்யியல், துறவு, தத்துவங்கள், குறியீடுகள்*

***முன்னுரை :-***

*இந்தியத் தத்துவ மரபு உலகின் தொன்மையான சிந்தனை மரபுகளில் ஒன்றாகின்றது. மனித வாழ்க்கையின் தோற்றம், உயிரின் இயல்பு, கடவுள் , அறம், மறுபிறப்பு, விடுதலை போன்ற அடிப்படையான வினாக்களுக்கு விடை காணும் நோக்கில் இந்தியாவில் பல்வேறு தத்துவங்கள் தோன்றின. இத்தத்துவங்கள் வெறும் சமயக் கோட்பாடுகளாக மட்டும் இல்லாமல்,மனித வாழ்வை நெறிப்படுத்தும் மெய்யியல் சிந்தனைகளாக விளங்குகின்றது.*

*வேதங்களை ஏற்றுக்கொள்ளும் சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம், மீமாம்சை,வேதாந்தம் ஆகியவை வைதீகத் தத்துவங்களாகும். வேதங்களை ஆதாரமாக ஏற்காத பௌத்தம்,சமணம்,ஆசீவகம் ஆகியவை அவைதீகத் தத்துவங்களாகும்.*

*இவற்றுள் ஆசீவகம் இந்திய சிந்தனை வரலாற்றில் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது. கி.மு. 6ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மக்கலி,கோசர் (Makkhali, Gosala) ஆசீவக சமயத்தின் முக்கிய முன்னோடியாகக் கருதப்படுகிறார். இந்தத் தத்துவத்தின் மையக்கருத்து ''நியதி'' (Niyati) ஆகும். உலகில் நடைபெறும் அனைத்தும் முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்டவை. மனிதனின் முயற்சியால் விதியை மாற்ற முடியாது. என்ற கொள்கையை*

ஆசீவகர்கள் வலியுறுத்தினர். இக்கருத்து மற்ற இந்தியத் தத்துவங்களிலிருந்து ஆசீவகத்தை வேறுபடுத்துகிறது.

**ஆசீவகர்களின் தன்மை:-**

ஆசீவகர்கள் மிகவும் எளிமையான துறவற வாழ்க்கையை மேற்கொண்டார்கள். உலகப் பற்றுகளைத் துறந்து தவ வாழ்க்கையை மேற்கொள்வதே உயர்ந்த வாழ்க்கை எனக் கருதினர். மேலும் உலகம் பல அடிப்படைத் தத்துவங்களால் ஆனது என்றும், உயிரின் பயணம் இயற்கையின் நியதிகளுக்கு உட்பட்டது. என்றும் அவர்கள் நம்பினர். இத்தகைய மெய்யியல் சிந்தனைகள் பின்னர் இந்திய சமய மற்றும் தத்துவ வளர்ச்சியிலும் மறைமுகமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஆசீவக சமயத்தின் மூல நூல்கள் இன்று முழுமையாகக் கிடைக்கவில்லை. இருப்பினும் பௌத்த மற்றும் சமண இலக்கியங்கள்,அசோகர் கால கல்வெட்டுகள்,தொல்லியல் சான்றுகள், தமிழ் இலக்கியங்கள் மற்றும் வரலாற்று ஆய்வுகள் மூலம் ஆசீவகத் தத்துவம் குறித்த பல தகவல்கள் அறியப்படுகின்றது. குறிப்பாக நீலகேசி,மணிமேகலை,சிலப்பதிகாரம் போன்ற தமிழ் இலக்கியங்களில் ஆசீவகர்கள் மற்றும் அவர்களின் கொள்கைகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றது. இக்குறிப்புகள் நேரடி வரலாற்றுச் செய்திகளாக மட்டுமல்லாமல்,இலக்கியப் புனைவுகளின் வாயிலாகவும் ஆசீவகச் சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றன.

**ஆசீவகப் புனைவுகள்:-**

புனைவுகள் என்பது கற்பனை , கருத்துருவாக்கம் மற்றும் இலக்கிய வெளிப்பாடு ஆகியவற்றின் இணைவாகும். இலக்கிய ஆசிரியர்கள் தத்துவக் கருத்துகளை வாசகர்களுக்குப் புரிய வைப்பதற்காகக் கதைகள், உரையாடல்கள், கதாப்பாத்திரங்கள், உவமைகள் போன்ற புனைவுக் கூறுகளைப் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு ஆசீவகத் தத்துவமும் பல இலக்கியங்களில் புனைவின் வழியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அந்தப் புனைவுகள் ஆசீவகத்தின் நியதிக்கொள்கை, துறவற வாழ்க்கை ,உலகப் பார்வை மற்றும் மனித வாழ்வியல் குறித்த கருத்துகளைப் பிரதிபலித்துக்காட்டுகின்றது.

**இலக்கியங்களில் ஆசீவகக் கூறுகள்:-**

ஆசீவகம் இந்திய சமுதாயத்தின் கணிசமான பகுதியின் ஆன்மீகத் தேவைகளை ஓரளவு நிறைவேற்றியது எனலாம். ஆசீவகர்களின் தத்துவத்தில் முக்கியமான ஒன்று மெய்ம்மையின் மாறாத் தன்மை கோட்பாடு. அதன்படி ஆசீவகத்தில் அணுக்களையும் அவை தொடர்பான மூலப்பொருட்களையும் பற்றிக் குறிப்பிடும்போது அவை நிரந்தனமானவை என்று கூறுகின்றனர்.

இதனை நீலகேசியில்

“எப்பாலும் தான் கெடா இவ்வளவும் தோன்றா” (பா.எண்: 696)

என்றும்

“இல்லாது தோன்றா கெடாஉள் என”

(பா. எண்:698)

சித்தரித்துக் காட்டப்படுகிறது.

இதற்கான விளக்கம் அடிப்படை அணுக்கள் மாற்றம் அடைதலின்றி என்றும் நிலை பெற்றிருக்கும் என்பது பொருள்.

இதனை “உள்ளதுகெடாது இல்லது தோன்றாது” என்றுரைக்கின்றார் ஆசீகவாதி.

ஆசீவகத்தைப் பற்றி மணிமேகலையில் சமயக்கணக்கர் திறம் கேட்ட காதையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

“ஆதியில்லாப் பரமாணுக்கள் தீதுற்றியாவதுஞ் சிதைவது செய்யா”

(பா.எண்:126)

என்று கூறுகின்றனர். அதன் பொருள் தொடக்க மில்லாத அடிப்படையான அணுக்கள் சிறிதும் கெட்டு அழியாதவை என்பதாகும்.

தற்போதைய வான் இயற்பியல் விஞ்ஞானிகள் கருத்துப்படி இன்று உலகத்தில் இருக்கும் பொருட்கள் யாவும் (மனிதன்,விலங்கு, தாவரம், அண்டம் என அதிலும் இருக்கும் அடிப்படைப் பொருள்கள் தோன்றவோ அழியவோ இல்லை. என்கிறார்கள்.அவை அழிவின்றி மாற்றமடைகிறது என்கிறார்கள்.

மணிமேகலையில் சமயக்கணக்கர் தம் திறம் கேட்ட காதையில் ஆசீவகநூல் “மற்கலிநூல்” எனக் குறிக்கப்படுகின்றன. ஆய்வுப் பேரறிஞர்கள் கருத்துக்களை நுணுகி நோக்கு வார். சிவன், உமை, திருமால் வழிபாடும்,ஆகமநெறியும் தமிழர்களுக்குச் சிறப்புரிமை உடையவை என்னும் உண்மையினை எளிதில் உணர்வர்.

சாங்கியம் , யோகம்,நையாயிகம் முதலிய தத்துவங்களிலும் ஆசீவகம், சமணம், பௌத்தம். ஆகிய அவைதிகத் தத்துவங்களிலும் கூட தமிழ்க்கூறுகள் இடம்பெற்றிருத்தல் ஆங்காங்குச் சுட்டப் பெற்றுள்ளது.

இந்நூல் வெறும் நிமித்த நூலாக இல்லாமல் அண்ட அமைப்பும்,அணுக்கொள்கையும் உய்யும் வழியும் உரைக்கும் ஆசீவகக் கொள்கை நூலாக அமைந்திருத்தல் வேண்டும் என்பது மணிமேகலைப் பகுதியால் அறிய முடிகிறது.(27:108-165)

தருக்க நூலாக எண்ணப்பெறும்நீலகேசியில் (கி.பி 900) ஆம் ஆண்டு பௌத்த நெறியினரைச் சமண நோக்கில் மறுத்த பின்னர்,ஆசீவகவாதம் அமைகிறது. எழுபத்தொரு பாடல்களில் ஆசீவகக்கருத்துக்களும் சமணநெறி விடுக்கும் மறுப்புக்களும் பிறவும் இடம்பெற்றுள்ளன.

நீலகேசி ஆசிரியர் ‘‘ஒன்பது கதிர்’’என ஆசீவக நூலினைக் குறித்தனர்.

(பா. எண் 671)

அணுத்திரளால் அமைந்த அண்டத்தியல்பு,அண்ணல்,பொருள், நிகழ்வு என்ற நான்கும் இந்நூற்பொருளாகக் காணப்படுகிறது. மோன வடிவமான மற்கலியார் சொல்லப்பெற்ற இந்நூல் ஒக்கலி,ஒகலி என்ற இருவராலும் மக்களிடையே பரவியது.

**முடிவுரை:-**

ஆசீவகரின் நியதிக்கொள்கையின் நிழல் கணியன் பூங்குன்றனார் இன் புறநானூற்றுப் பாடலில் பொலிதல் காணமுடிகிறது.

‘‘யாதும் ஊரே யாவரும் கேளிர்

தீதும் நன்றும் பிறர் தர வாரா

இன்னாதென்றலும் இலமே;

பெரியோரை வியத்தலும் இலமே......

( பா.எண் 192)

இப்பாடலில் ஓடும் வெள்ளத்துடன் ஒத்தோடும் மிதவையினை நியதிப்படி செயலாற்றும் உயிர்க்கு உவமையாகச் சொல்லப்பட்டிருத்தல் காணத் தக்கது.நியதியை, ‘‘முறை’’ என்ற அழகு தமிழால் சுட்டி சொல்லப்படுகின்றது.மனிதச் செயல்கள் நியதியால் முடிவு கட்டப்படுபவை என்பதும்,நியதியை மீறியோ எதிர்த்தோ செல்லுதல் இயலாது.என்பதும் இவ்வுமையால் கவிச்சுவைப் பெருகக் கணியன் பூங்குன்றனார் தெளிவுறுத்தியதை அனைவரும் அறிய முடிகிறது. நியதிக்கொள்கை ஆரியர் வருகைக்கு முற்பட்டத் திராவிடர்களால் பின்பற்றப் பட்டதென்று

அறிஞர்கள் கருதுவதால் இத்தமிழ்க் கொள்கை அக்காலத்து ஆசீவகர்களால் கைக்கொள்ளப்பட்டது எனக்கருதுவது ஆய்வு நெறிக்கு ஒத்ததாக உள்ளது.

பார்வை நூல்கள்


1. சோ.ந. கந்தசாமி,இந்தியத்தத்துவக்களஞ்சியம், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.

2. நீலகேசி, சக்கரவர்த்தி பதிப்பகம், கும்பகோணம்.

3. புறநானூறு (பழைய உரையுடன்),சாமிநாதையர் பதிப்பு, சென்னை.

4. மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார், சென்னை.


*Reference Books*


*1. So. Na. Kandasamy, Encyclopaedia of Indian Philosophy (Indian Thathuvakkalanjiyam), Meyyappan Pathippagam, Chidambaram.*

*2. Neelakesi, Chakravarthi Pathippagam, Kumbakonam.*

*3. Purananuru (with ancient commentary), Swaminatha Iyer Edition, Chennai.*

*4. Manimekalai. Seethalai Sathanar, Chennai.*

ARAN International e-Journal of Tamil Research
அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com